பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

15 10 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜல்ஜீவன் இயக்கத்தின்கீழ், நாட்டிலுள்ள 80 சதவீதத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு, குழாய்வழி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் அருகே, பேருந்து ஒன்று தீப்பற்றி விபத்துக்குள்ளானதில், 20 பேர் உயிரிழந்தனர்.

   *இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் ஆழ்ந்த் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

3. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான சிறந்த இடமாக தமிழகம் வளர்ந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்திற்கு தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. தமிழகம் புதுச்சேரியில் அநேக மாவட்டங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஜல்ஜீவன் இயக்கத்தின்கீழ், நாட்டிலுள்ள 80 சதவீதத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு, குழாய்வழி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, மத்திய ஜல்சக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள 15 கோடியே 71 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள், அரசுக்கும்,மக்களுக்குமிடையே பாலமாக பணியாற்றி, மக்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்திருப்பதாகவும், அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

அடுத்த கட்டமாக, திட்டத்தின் நீண்டகால நிலைத்தன்மை, செயல்திறன் மற்றும் சேவை வழங்குதலை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜல்சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் அருகே, பேருந்து ஒன்று தீப்பற்றி விபத்துக்குள்ளானதில், 20 பேர் உயிரிழந்தனர். 15க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜோத்பூர் நெடுஞ்சாலையில் உள்ள தையாட் பகுதியில் நேரிட்ட இந்த விபத்திற்கு பேருந்தின் குளிர்சாதன எந்திரத்தில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக இருக்கக்கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் காயமடைந்து ஜோத்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரை அம்மாநில முதலமைச்சர் திரு.பஜன் லால் சர்மா, நேரில் சந்தித்து அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு மத்திய அரசின் சார்பில், தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான சிறந்த இடமாக தமிழகம் வளர்ந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியின் நிறைவு விழாவில் பேசிய அவர், திறமையான விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இந்தப் போட்டிகள் நடத்தப்படுவதாக கூறினார்.

இதில் வெற்றி பெறுவோருக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு முதல் முறையாக E-Sports நடத்தப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் Elite வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை 30 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

வரும் காலத்திலும் வீரர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்திற்கு தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோரின் உடல்களை இரவோடு இரவாக பிரேதப்பரிசோதனை நடத்தியது குறித்து உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பி இருப்பதை சுட்டிக்காட்டினார்.

மாநிலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக கூறிய திரு. நயினார் நாகேந்திரன், சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டு போதைப்பொருள் பழக்கமும் அதிகரித்திருப்பதாக குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில், குடியிருப்புகள் மற்றும் தெருக்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஜாதிப் பெயர்களை நீக்குவதில் அவசரம் காட்டக் கூடாது என்று, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.செல்வப் பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

சென்னை குரோம்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரம் குறித்து, விரிவாக ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும் என்று, மாநில அரசைக் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தீபாவளி பண்டிகையை, விபத்து மற்றும் மாசு ஏற்படாத வகையில் கொண்டாடுமாறு பொதுமக்களை தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நீதிமன்ற தீர்ப்புகளின்படி கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும், இரவு 7 மணி முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குறைந்த ஒலி மற்றும் குறைந்த அளவிலான மாசு ஏற்படுத்தும் தன்மைகொண்ட பசுமைப் பட்டாசுகளை மட்டுமே வெடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள், வழிபாட்டுத்தலங்கள், குடிசைப் பகுதிகளுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்குமாறும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

தமிழகம் புதுச்சேரியில் அநேக மாவட்டங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்றிரவு முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

தென்காசி மாவட்டத்தில் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்யும் மழை காரணமாக குற்றால அருவிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Senthil - 37 Sec)

இதனிடையே சேலம் மாவட்டத்தில் மேட்டூர், மேச்சேரி, நங்கவல்லி, கொளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்த மழையால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி மாணவர்களும், வேலைக்குச் செல்வோரும் சிரமத்திற்கு ஆளாகினர்.

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பான பிரச்சினைகள் குறித்து பொதுமக்கள் தகவல் தெரிவிக்க ஏதுவாக மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. ரஞ்சித்சிங் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் வரும் 17ஆம் தேதியன்று ஜோலார்பேட்டையில் நடைபெற உள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வைத்துள்ள வீரர்கள் இப்போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள Donetsk பகுதியை ரஷ்யா கைப்பற்றியிருப்பதாக, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

தீவு நாடான மடகாஸ்கரில் ஆட்சியைக் கைப்பற்றியிருப்பதாக, அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது.

**<<<<>>>>**

நாட்டின் பாதுகாப்பு ஆயத்த நிலை குறித்து, முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் எழுதியுள்ள நூலை, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் புதுதில்லியில் நேற்று வெளியிட்டார்.

<<<<>>>>

மணிப்பூரில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் ஒரே நாளில், 42 பேருக்கு, டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாகாலாந்தில், நாகா மக்கள் முன்னணி கட்சி, முதலமைச்சர் திரு. Neiphiu Rio தலைமையிலான ஆளும் மக்கள் ஜனநாயகக் கூட்டணியில் இணைந்துள்ளது.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காற்றின் தரம் மேலும் மோசமடைவதைத் தடுக்க, 27 அம்ச புதிய செயல் திட்டம் ஒன்று அமல்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்ட வைர விழாவையொட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அமைக்கப்பட்டுள்ள புதிய பூங்காவை வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.

<<<<>>>>

காரைக்கால், நாகப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த படகுகள் பாக் ஜலசந்தி கடலில் மீன்பிடிக்க தடை விதிக்க வேண்டும் என்று ராமேஸ்வரம் மீனவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

<<<<>>>>

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே, வட மாநிலத்திலிருந்து போதைப் பொருட்களை கடத்திவந்த இருவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>

நீலகிரி மாவட்டம் முதுமலை வனப்பகுதியில் அமைந்துள்ள பழங்குடியினர் அரசு உண்டு உறைவிடப் பள்ளியில் ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவை ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சுல்தான் ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா 3 கோல் அடித்தன.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின்போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட்டது.

இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 258 ரன் எடுத்திருந்தது.

<<<<>>>>

மாநில சீனியர் த்ரோபால் சாம்பியன் போட்டிகள் திருநெல்வேலியில் இம்மாதம் 24ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<The End>>>>